## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No.** : **C.C. No. 122/2024**

**Prosecution Witness** : **P.W. 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 14/07/2025

Accused Present.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது நல்லூரில் வசித்து வருகிறேன். கடந்த 21.05.2023 ல் மதியம் 4.45 மணியளவில் நான் அந்த வழியாக என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். என்னவென்று பார்த்து கேட்ட போது, விபத்து ஒன்று நடந்து விட்டதாக என்னிடம் கையெழுத்து ஒன்று சாட்சியாக கேட்டார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையொப்பங்களில் 2 வது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகஜரிலுள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

போலிசார் தாங்கள் எழுதி வைத்திருந்த தாளில் கையெழுத்து கேட்டார்கள் அதனால் போட்டேன் என்றால் சரிதான். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : C.C. No. 122/2024**

**Prosecution Witness : P.W. 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : விஜயகுமார் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 14/07/2025

Accused Present.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பாடியநல்லூர், செங்குன்றத்தில் வசித்து வருகிறேன். கடந்த 21.05.2023 ல் மதியம் 1.30 மணியளவில் நல்லூர் டோல் பிளாசா வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அரசுப் பேருந்து TN 21 N 1986 என்ற வண்டி இருசக்கர வாகனம் TN 18 BD என்ற வாகனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது அதிவேகமாக வந்த மேற்படி பேருந்து மோதி அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு தலை மற்றும் உடம்பில் காயங்கள் ஏற்பட்டது. நான் அச்சமயம் என்னுடைய இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செங்குன்றத்திற்கு சென்று கொண்டிருந்த போது, மேற்படி விபத்து ஏற்பட்டதை நான் என் கண்ணால் பார்த்தேன். இருசக்கர வாகன ஓட்டி மேற்படி விபத்தில் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். போலிசார் சம்பவயிடத்திலேயே வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

கே.எம். ரமேஷ் என்ற விபத்து இழப்பீடுகள் பெற்றுத் தரும் வழக்கறிஞரிடம் நான் தரகராக வேலை செய்கிறேன் என்றால், இல்லை. என் நண்பர் ஆவார். இது

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

போன்ற விபத்து வழக்குகளில் சாட்சி சொல்வது தான் என்னுடைய வேலை என்றால், சரியல்ல. பாடியநல்லூர் டோல் பிளாசாவில் எத்தனை வழி உள்ளது என்றால், 6 வழி உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், 8 வழிகள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி அரசுப் பேருந்து 8 வழிகளில் எந்த வழியாக சென்றது என்றால், இடது பக்கம் 2 வது வழியில் சென்றது. நான் சொல்வது தவறான தகவல் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் போடப்பட்ட வரைபடத்தில் 3 வது வழியில் தான் பேருந்து சென்றதாக உள்ளது என்றால், தெரியாது. மேற்படி டோல் பிளாசாவில் இருசக்கர வாகனம் செல்வதற்கு தனி வழி இருக்கிறது என்றால் சரிதான். அந்த தனி வழியில் எந்த தடை நிறுத்தமும் இல்லை என்றால், சரிதான்.

மேற்படி டோல் பிளாசாவில் பேருந்துகள் அனைத்தும் நின்று தடை நீங்கிய பின்பு தான் செல்லும் என்றால் சரிதான். மெதுவாக தான் வாகனங்கள் டோலை கடக்கும் என்றால் சரிதான். பன்னீர்வாக்கம் என்ற ஊர் சென்னைக்கு போகும் வழியில் இடது பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். பன்னீர்வாக்கத்தில் இருந்து செங்குன்றம் வழியாக சென்னை செல்ல வேண்டும் என்றால், கிழக்கிலிருந்து வரும் போது தெற்கு பக்கம் உள்ள சாலையில் செல்ல வேண்டும். இறந்து போன இருசக்கர வாகன ஓட்டி அப்படி செல்ல வேண்டியிருந்தால், இடது பக்கம் உள்ள வழியில் இருசக்கர வாகன ஓட்டிகள் செல்லும் வழியில் தான் சென்றிருக்க வேண்டும் என்றால், அப்படி தான் அந்த இருசக்கர வாகன ஓட்டி வந்தார். அப்போது தான் விபத்து ஏற்பட்டது. பன்னீர்வாக்கத்தில் இருந்து டோல் கேட்டை கடந்து சென்னை செல்ல வேண்டுமென்றால், ரோட்டை கடக்க அவசியமில்லை என்றாலும், அங்கு கடப்பதற்கு எந்த சிக்னலும், ஜீப்ரா கிராஸிங்கும் இல்லை என்றாலும், சரிதான்.

மோட்டார் சைக்கிளை தவிர எந்த வாகனமும் நான் சொல்லும் அந்த வழியில் வேகமாக செல்ல முடியாது என்றால், இருசக்கர வாகனம் மட்டும் தான்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

வேகமாக செல்ல முடியும். பஸ், லாரி வேகமாக செல்ல முடியாது. இறந்த நபர் எனக்கு எப்படி தெரியும் என்றால், என்னுடன் தொழில் செய்த நபர் ஆவார். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், என்னுடன் தொழில் செய்த நபர் என்பதாலும், நேரடியான கண்ணுற்ற சாட்சி இல்லாததாலும், என்னை இந்த வழக்கில் சாட்சியாக போட்டு அதற்காக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. டோல் கேட்டில் நின்றிருந்த பேருந்து மீது வேகமாக சட்டப்படி கடக்கக் கூடாத இடத்தில் வந்து விபத்தை தானே ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. அரசு ஓட்டுநரான ஆஜர் எதிரி மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA